# ஆகஸ்ட்– 28 – செவ்வாய்

### புனித அகஸ்தீன்

### விண்ணுலகம் மகிழ்வதாக: மண்ணுலகம் களிகூர்வதாக: திபா. 96:11

## முதல் வாசகம் : 2 தெசலோனி 2: 1 – 3, 14 – 17

சகோதர சகோதரிகளே! நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் வருகையைப் பற்றியும் அவரோடு நாம் ஒன்று கூடுவதைப்பற்றியும் உங்களுக்கு நாங்கள் கூற விழைவது. ஆண்டவருடைய நாள் வந்துவிட்டது என, இறைவாக்காகவோ அருளுரையாகவோ நாங்கள் எழுதிய திருமுகத்தின் செய்தியாகவோ யாராவது சொன்னால், நீங்கள் உடனே மனங்கலங்கி நிலைகுலைய வேண்டாம் திகிலுறவும் வேண்டாம். எவரும் உங்களை எவ்வகையிலும் ஏமாற்ற இடம் கொடாதீர். ஏனெனில் இறைவனுக்கு எதிரான கிளர்ச்சி முதலில் வந்தே தீரும். பின்னர், நெறிக்கெட்ட மனிதன் வெளிப்பட வேண்டும். அவன் அழிவுக்குரியவன்.நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மாட்சியை நீங்கள் அடையும்பொருட்டே, நாங்கள் அறிவித்த நற்செய்தியின் வழியாக அவர் உங்களை அழைத்தார். ஆகவே அன்பர்களே! எங்கள் வாய்மொழி வழியாகவோ திருமுகம் வழியாகவோ அறிவிக்கப்பட்ட முறைமைகளைப் பற்றிக் கொண்டு அவற்றில் நிலையாயிருங்கள். நம் ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவும், நம்மீது அன்புகூர்ந்து தம் அருளால் நிலையான ஆறுதலையும் எதிர்நோக்கையும் அளித்த நம் தந்தையாம் கடவுளும்உங்கள் உள்ளங்களுக்கு ஊக்கமளித்து, நல்லதையே சொல்லவும் செய்யவும் உங்களை உறுதிப்படுத்துவார்களாக!

**பதில்பாடல் :** மண்ணுலகிற்கு நீதித் தீர்ப்பு வழங்க ஆண்டவர் வருகின்றார்.

## நற்செய்தி : மத்தேயு 23 : 23 – 26

அக்காலத்தில் இயேசு கூறியதாவது ”வெளிவேடக்கார மறைநூல் அறிஞரே, பரிசேயரே, ஐயோ! உங்களுக்குக்கேடு! நீங்கள் புதினா, சோம்பு, சிரகம் ஆகியவற்றில் பத்தில் ஒரு பங்கைப் படைக்கிறீர்கள். ஆனால் திருச்சட்டத்தின் முக்கிய போதனைகளாகிய நீதி, இரக்கம், நம்பிக்கை ஆகியவற்றைக் கடைப்பிடிக்காமல் விட்டுவிடுகிறீர்கள். இவற்றைக் கண்டிப்பாய்க் கடைப்பிடிக்க வேண்டும். அவற்றையும் விட்டுவிடக்கூடாது.குருட்டு வழிகாட்டிகளே! நீங்கள் பருகும்போது கொசுவை வடிகட்டி அகற்றுகிறீர்கள். ஆனால் ஒட்டகத்தையோ விழுங்கிவிடுகிறீர்கள். ”வெளிவேடக்கார மறைநூல் அறிஞரே, பரிசேயரே, ஐயோ! உங்களுக்குக் கேடு! ஏனெனில் நீங்கள் கிண்ணத்தையும் தட்டையும் வெளிப்புறத்தில் தூய்மையாக்குகிறீர்கள். ஆனால் அவற்றின் உட்புறத்தையோ கொள்ளைப் பொருள்களாலும் தன்னல விருப்புகளாலும் நிரப்புகிறீர்கள்.குருட்டுப் பரிசேயரே, முதலில் கிண்ணத்தின் உட்புறத்தைத் தூய்மையாக்குங்கள். அப்பொழுது அதன் வெளிப்புறமும் தூய்மையாகும்“ என்றார்.

**தியானம் :** தனது இளவயதில் கீழ்த்தரமான விபச்சார அடிமை வாழ்வில் உருக்குலைந்தாலும் அவரது தாயார் புனித மொனிக்காவின் இடைவிடாத செபித்தலால் தனது 33வயதில் கிறிஸ்தவனாகி, 36வயதில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு, 41வயதில் ஆயராக அபிசேகிக்கப்பட்ட புனிதர் அகஸ்தீனை இன்று நினைவுகூருகின்றோம். இப்புனிதரை அன்னையாம் திரு அவை தனது இறையியல் வல்லுநரில் மேலான ஒருவராகக் கருதுகின்றது. புனித அகஸ்தீன் இறைமகன் இயேசுவால் தொடப்பட்ட நாளிலிருந்து இன்றைய நற்செய்திக்கமைவாக வாழ்ந்த உன்னதர் எனப்பலரும் போற்றுகின்றனர். இன்றைய நற்செய்தியை நாம் நோக்குமிடத்து ஆண்டவர் இயேசுவின் கண்டிப்பான வார்த்தைகள் நமது காதுகளில் விழலாம். எமது வெளியரங்கமான செயல்களினால் நாம் நல்லவர்கள் போலக் காட்டிக்கொண்டாலும் எமது அந்தரங்கமான செயல்களால் ஆண்டவர் இயேசுவுக்கு மிகவும் வெறுப்பூட்டக்கூடிய செயல்களையே செய்கின்றோம். நாம் ஒருவரது வெளிவேட செயல்களை வைத்தே அவர்களைக் கணிப்பிட்டு மரியாதை கொடுக்கின்றோம். ஆயினும், தனது சாயலாக எம்மைப் படைத்த எல்லாம் வல்ல இறைவன் எமது உள்ளத்து நினைவுகளையே அறிந்தவராக இருக்கின்றார் என்பதே உண்மை. கிறிஸ்தவர்கள் எனப்பெருமையோடு அழைக்கும் நாம் எமது கிண்ணத்தின் (உள்ளத்தின்) (மத்தேயு23:26) உட்புறத்தைத் தூய்மையாக்குவோம். அப்போது வெளிப்புறமாகும் தூய்மை உடையதாக மாற்றமடையும். ஏனெனில் இறைவனுக்கு நம் இதயங்களைத் திறந்து நாம் இறைவனுக்கு அடிமையாவதிலேயே உண்மையான விடுதலை நமக்குக்கிட்டுகிறது. நம் இதயங்களைத் திறந்து தூய ஆவியாரின் செயற்பாடுகளை அனுமதிப்பதன் மூலமே இறைவனின் புதிய கட்டளையைப் புரிந்துகொள்ளமுடியும். நம் மனங்களை மாற்றுவதற்கு தூய ஆவியாரை அனுமதிக்கவில்லையெனில், அது வெளிவேடமாகும். இரு தலைவர்களுக்கு நாம் சேவையாற்ற முடியாது. ஒன்றில் இறைவனுக்கு, அல்லது இவ்வுலகின் சுகங்களுக்கு சேவையாற்ற வேண்டியிருக்கும். மாறாக அங்கொரு கால், இங்கொரு கால் என நிற்கமுடியாது. ஆதலால், எமது அந்தரங்க செயல்களால் ஆண்டவர் இயேசுவுக்கு நாம் மகிழ்ச்சியூட்டுகிறோமா? இதனையே “உன்னையே நீ அறிவாய்” என மாபெரும் தத்துவ ஞானி சோக்கிரட்டீஸ் கூறியுள்ளார். எம்மையே நாம் ஆராய்ந்து பார்ப்போமா?.